**செ. கு. எண்:066** **நாள்: 30.06.2019**

<u>மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **திரு.எடப்பாடி K.பழனிசாமி** அவர்களின் அறிக்கை – 30.6.2019</u>

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாரசந்தை மைதானத்தில் நடைபெற்று வந்த கேளிக்கை ரங்கராட்டினத்தில் திரு. ராஜேந்திரன் (லேட்) என்பவரின் மகன் செல்வன் விஷ்ணு என்பவர் தவறி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், வேம்படிதாளம் குறுவட்டம், ஆட்டையாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. பிரபு என்பவரின் மகன் செல்வன் உதயநிதி என்பவர் இரும்பு கேட் உடைந்து விழுந்து, பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், காரைக்குடி வட்டம், அரியக்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. வெள்ளைச்சாமி என்பவரின் மகன் திரு. பாண்டி என்பவர் கிணற்றை தூர்வாரும் பணியில் ஈடுபட்டிருந்த போது, விஷ வாயு தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை மாவட்டம், புளியந்தோப்பு பகுதியைச் சேர்ந்த திரு. ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு. சரவணன் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டம், பூனாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிங்காரம் என்பவரின் மனைவி திருமதி மல்லிகா என்பவர் திடீரென வீசிய பலத்த காற்றில், அவரது வீட்டில் இருந்த ஆஸ்பெஸ்ட்டாஸ் சீட் உடைந்து விழுந்ததில், பலத்த காயமடைந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் வட்டம், செட்டிதாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பக்கவுண்டர் என்பவரின் மகன் திரு. ஐயப்பன் என்பவர் கிணற்றை ஆழப்படுத்தும் பணியில் ஈடுபட்டிருந்த போது, பக்கவாட்டு சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், கண்ணன்தாங்கல் கிராமத்தைச் சேர்ந்த திரு. பெருமாள் என்பவரின் மகன் திரு. கிருஷ்ணன் என்பவர் அரசுப் பேருந்து மோதிய விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், மேல மூங்கிலடி கிராமத்தைச் சேர்ந்த திரு. தாமோதரன் என்பவரின் மகன் செல்வன் பாலமுருகன் என்பவர் பள்ளி நிகழ்ச்சியின் போது மயங்கி விழுந்து உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், உடைகுளம் கிராமத்தைச் சேர்ந்த திரு. அழகுமணி என்பவரின் மகன் திரு. மாரிதாஸ் என்பவர் சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் வேதனை அடைந்தேன்.

மேற்கண்ட பல்வேறு நிகழ்வுகளில் உயிரிழந்த 9 நபர்களின் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்கண்ட பல்வேறு விபத்துக்களில் **உயிரிழந்த 9 நபர்களின் குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாய்** முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**